# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.4
## OS.NO.56/2018(C/w 24/2019,57/2019, 66/2019)

**Name** : Sekar
**Father/Husband Name** : Radhakrishnan
**Age** : 44

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.07.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:** 02.55 p.m

**1 முதல் 7 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தனலட்சுமி( வா.சா.3) எனக்கு பெரியம்மா பொண்ணு ஆவார். அவர் தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். நீதிமன்றத்திலிருந்து எந்தவிதமான சம்மன் வரவில்லை.எனக்கு வயது 44. நான் பிரமாண வாக்குமூலத்தில் 1985 ஆம் ஆண்டில் ஆதிமூலம் எழுதி கொடுத்த உயில் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. அந்த சமயத்தில் எனக்கு 5 வயதாக இருக்கும்போது நடந்தது. தனலட்சுமிக்கு பன்னீர்செல்வம் தான பத்திரம் எழுதிகொடுத்தபோது எனக்கு வயது 35. தான பத்திரம் மொத்தம் எத்தனை பக்கம் என்றால் நினைவில்லை. நான் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் நினைவில்லை. நான் கைநாட்டு போட்டேனா என்றால் கையெழுத்து போட்டேன்.

அந்த தான பத்திரத்தை தயார் செய்தவர் பற்றி நினைவில்லை. அந்த தான பத்திரம் எத்தனை மணிக்கு பதிவு செய்தார் என்றால் நினைவில்லை. பன்னீர்செல்வம் உயிருடன் இல்லை. அவர் எப்போது காலமானார் என்றால் 31.05 வருடம் நினைவில்லை. பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்தி

சகோதரர்கள். அவர்கள் இருவரும் காட்பாடி நீதிமன்றத்தில் தடையுறுத்து கட்டளை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது.

நான் இருக்கும் இடத்திற்கும் சொத்து உள்ள இடத்திற்கும் சுமார் 18 கிமீ இருக்கும். என் அக்கா தனலட்சுமி நிரந்தரமாக பெங்களூரில் இருக்கிறார் என்றால் என் அம்மா அங்கு இருக்கிறார். இன்றும் அவர் பெங்களூரிலிருந்து தான் வந்தாரா என்றால் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவர் மகனுடன் இருக்கிறார். போய் போய் வருவார். ஆதிமூலம் உயில் எழுதுவதற்கு சொத்து சம்மந்தமான எந்த உரிமையும் இல்லை என்றால் தெரியாது. நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

உயில் எழுதுவதற்கு ஆதிமூலம் என்பவருக்கு உரிமை இல்லை என்பதால் பன்னீர்செல்வம் எழுதி கொடுத்த தான பத்திரம் செல்லுப்படியாகாது என்றால் சரியல்ல. தனலட்சுமி என் சகோதரி என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் சாட்சி போட்ட மற்றொரு நபரின் பெயர் ராஜேஷ். அவரின் தகப்பனார் பெயர் முருகேசன். ராஜேஷ் உயிருடன் உள்ளார். சேவூர் அவருக்கு பூர்வீகம். தற்போது அவர் எங்கிருக்கிறார் என்று தெரியாது.

**விசாரணை முடிந்த நேரம்:** 03.05 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.